www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Madurai dist 15/02/23

ஆயத்த தேர்வு 2023
கணக்குப்பதிவியல்
வகுப்பு : 11

நேரம் : 3.00 மணி
மதிப்பெண்கள் : 90

தேர்வு எண் 0 1 1 2 3 5

I சரியான விடையைத் தேர்வு செய்யவும் (20 X 1 = 20)

1. பின்வருவனவற்றில் எது கணக்கியலின் பிரிவுகளில் இடம்பெறாது
(அ) நிதிநிலைக் கணக்கியல் (ஆ) மேலாண்மைக் கணக்கியல்
(இ) மனிதவளக் கணக்கியல் (ஈ) மேற்கண்டஏதுமில்லை

2. ஒரு வணிகத்தின் நிதிநிலையை அறிந்து கொள்ள அடிப்படையானது
(அ) குறிப்பேடு (ஆ) இருப்பாய்வு (இ) இருப்பு நிலைக் குறிப்பு (ஈ) பேரேடு

3. வணிகத்தின் உரிமையாளர் இட்ட முதலிற்கு, வணிக நிறுவனம் கடன்பட்டிருக்கிறது என்பதை கூறும் கருத்து
(அ) பண மதிப்பீட்டுக் கருத்து (ஆ) அடக்கவிலை கருத்து
(இ) வணிகத் தனித்தன்மை கருத்து (ஈ) இரட்டைத்தன்மை கருத்து

4. GAAP என்பது:
(அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
(ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
(இ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

5. கணக்கியல் சமன்பாடு, எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
(அ) இரட்டைத் தன்மை (ஆ) நிலைத்தன்மை (இ) நிறுவனத் தொடர்ச்சி (ஈ) நிகழ்வுத்தன்மை

6. பேரேட்டுக் கணக்குகள் தயாரிப்பதன் முக்கிய நோக்கம்
(அ) நிதி நிலைமையை அறிய
(ஆ) இலாபம் அல்லது நட்டத்தை அறிய
(இ) நிதிநிலைமை மற்றும் இலாபநட்டத்தை அறிய
(ஈ) ஒவ்வொரு பேரேட்டுக் கணக்கின் இருப்பை அறிய.

7. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கி இருக்கும்?
(அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் (ஆ) சொத்துக் கணக்குகள் மட்டும்
(இ) பெயரளவு கணக்குகள் மட்டும் (ஈ) அனைத்து கணக்குகளும்

8. ஒரு குறிப்பிட்ட கால கொள்முதல் ஏட்டின் மொத்தம், எடுத்தெழுதப்படுவது
(அ) கொள்முதல் கணக்கின் பற்றுபக்கம் (ஆ) விற்பனை கணக்கின் பற்றுபக்கம்
(இ) கொள்முதல் கணக்கின் வரவுப்பக்கம் (ஈ) விற்பனை கணக்கின் வரவுப்பக்கம்

9. நிலைச்சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்யவேண்டிய ஏடு
(அ) கொள்முதல் ஏடு (ஆ) விற்பனை ஏடு (இ) கொள்முதல் திருப்ப ஏடு (ஈ) உரிய குறிப்பேடு

10. சாதாரண ரொக்க ஏட்டை வைத்திருக்கும் ஒரு நிறுவனம், எந்த கணக்கை தயாரிக்க தேவை இல்லை?
(அ) பேரேட்டில் விற்பனைக் கணக்கு (ஆ) பேரேட்டில் கொள்முதல் கணக்கு
(இ) பே ரேட்டில் முதல் கணக்கு (ஈ) பேரேட்டில் ரொக்கக் கணக்கு

11. வங்கி அறிக்கை என்பது
(அ) ரொக்க ஏட்டின் ரொக்கப் பத்தியின் நகல்
(ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப் பத்தியின் நகல்
(இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்

Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

(ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

12. பின்வருபவற்றில் எது வங்கிச் சரிகட்டும் பட்டியலின் சிறப்பியல்பு அல்ல.

(அ) காசோலை தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை சரிகட்டும் பட்டியல் காண்பிக்கும்

(ஆ) சரிகட்டும் பட்டியல் கணக்காளர் ரொக்கத்தை கையாளும் போது செய்யக்கூடிய மோசடிகளை தடுக்கிறது

(இ) வங்கி இருப்பின் உண்மையான நிலையை அறிய பயன்படுகிறது

(ஈ) சரிகட்டும் பட்டியல் கணக்காண்டின் இறுதியில் மட்டுமே தயாரிக்கப்படுகிறது

13. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்

(அ) விதிப்பிழைகள் (ஆ) அதிகமாகக் கூட்டுதல்பிழைகள்

(இ) குறைவாகக் கூட்டுதல்பிழைகள் (ஈ) பகுதி விடு பிழைகள்

14. கீழ்க்கண்ட பிழைகளில் எந்தப்பிழை அனாமத்துக் கணக்கைப் பயன்படுத்தி திருத்தம் செய்யப்படும்?

(அ) கொள்முதல் திருப்ப ஏட்டில்ரூ. 1,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(ஆ) நரேந்திரனால் சரக்கு திருப்பித் தரப்பட்டது. ஏடுகளில் பதிவு செய்யப்படாமல் உள்ளது

(இ) அகிலாவால்ரூ. 900 மதிப்புள்ள சரக்கு திருப்பித் தரப்பட்டது. விற்பனைத் திருப்ப ஏட்டில்ரூ. 90 என பதிவு செய்யப்பட்டுள்ளது

(ஈ) ரவிவர்மனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்படாமல் உள்ளது

15. சொத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் காலப்போக்கில் அதிகரிக்கும் போது பின்வரும் தேய்மான முறைகளுள் எது சிறந்தது?

(அ) நேர்க்கோட்டு முறை (ஆ) குறைந்து செல் இருப்பு முறை

(இ) தேய்மான நிதி முறை (ஈ) ஆண்டுத் தொகை முறை

16. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்

(அ) வருவாயினச் செலவுகள் (ஆ) முன் கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்

(இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள் (ஈ) முதலினச் செலவுகள்

17. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது.

(அ) அடக்கவிலையில்

(ஆ) சந்தை விலையில்

(இ) அடக்கவிலை அல்லது சந்தைவிலை இதில் எது அதிகமோ அந்த விலையில்

(ஈ) அடக்கவிலை அல்லது நிகரத் தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

18. இருப்புநிலைக்குறிப்பு வணிகத்தின் ________ காண்பிக்கிறது.

(அ) இலாபத்தினை (ஆ) நிதி நிலையினை (இ) விற்பனையை (ஈ) கொள்முதலை

19. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் இவைகளுக்கு ஏற்றவை.

(அ) சிறிய, பாரம்பரிய வணிகம் (ஆ) பெரிய, நடுத்தர வணிகம்

(இ) பெரிய, தனித்தன்மையான வணிகம் (ஈ) மேலேகூறிய எதுவும் இல்லை

20. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.

(அ) உருவாக்கப்பட்டகணக்கியல் மென்பொருள்

(ஆ) ஆயத்தகணக்கியல் மென்பொருள்

(இ) உள்கட்டமைக்கப்பட்டமென்பொருள்

(ஈ) திருத்தியமைக்கப்பட்டகணக்கியல் மென்பொருள்

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) ((7X2=14)

21. கணக்கியல் தகவல்களை பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகளின் பெயர்களைத் தருக.

22. கணக்கியலில் முழு வெளியீட்டு கொள்கை என்றால் என்ன?

23. விடுபட்டபகுதிகளை நிரப்புக.

| சொத்துகள் = | பொறுப்புகள் + | முதல் |
|---|---|---|

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

| | | | |
|---|---|---|---|
| (அ) | 30,000 | 20,000 | ? |
| (ஆ) | 25,000 | ? | 15,000 |
| (இ) | ? | 25,000 | 30,000 |
| (ஈ) | 40,000 | ? | 30,000 |

24. இடாப்பு என்றால் என்ன?
25. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர்31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார்செய்க.
   (அ) ரொக்க ஏட்டின் படி இருப்பு ரூ. 7,130
   (ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ரூ. 1,000
   (இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ரூ. 800
26. ஜூலை1, 2016 அன்று, அறைகலன் ரூ. 1,00,000 க்கு வாங்கப்பட்டது. அதன் வாழ்நாள் 5 ஆண்டுகள். 5 ஆண்டுகள் முடிவில் அதன் இறுதி மதிப்பு ரூ. 10,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.
27. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து சரக்கு விற்பனைக்கான அடக்கத்தினை கணக்கிடவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | மறைமுகச் செலவுகள் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | இறுதிச் சரக்கிருப்பு | 15,000 |
| நேரடிச் செலவுகள் | 7,000 | | |

28. கணக்குகள் குழுப்படுத்துதல் என்றால் என்ன?
29. இருப்பாய்வு என்றால் என்ன?
30. கீழ்க்கண்ட பிழைகள் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவைகளைத் திருத்தவும்.
   (அ) விற்பனை ஏட்டில் ரூ. 100 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
   (ஆ) விற்பனை ஏட்டில் ரூ. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது
   (இ) கொள்முதல் ஏட்டில் ரூ. 300 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது
   (ஈ) கொள்முதல் ஏட்டில் ரூ. 400 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
(வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்) ( 7 x 3 = 21)

31. நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு பற்றி விளக்குக.
32. கணக்கியல் தரநிலைகள் குறித்து சிறு குறிப்பு வரைக.
33. பினவரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | ............................க/கு | ப | ------- | |
| | ............................க/கு | ப | ------- | |
| | நிஹா க/கு | | | ------- |
| | (ரூ. 18,800 பெற்றுக் கொண்டு நிஹாவின் ரூ.19,000 றகான க/கு தீர்க்கப்பட்டது) | | | |

34. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.
35. பின்வரும் பிழைகள், இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றை திருத்தம் செய்யவும்.
   (அ) கட்டடம் மீதான தேய்மானம் ரூ. 5,000 தேய்மானக் கணக்கில் எடுத்தெழுதப்படவில்லை.

Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

(ஆ) வெங்கட்டுக்கு ரூ. 2,000 கூலி செலுத்தியது. கூலிக் கணக்கில் இருமுறை எடுத்தெழுதப்பட்டுள்ளது.

(இ) நிலாவுக்கு கடனுக்கு ரூ. 250க்கு சரக்கு விற்றது. சரியாக விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்ட போதிலும், பேரேட்டில்ரூ. 200 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

36. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து டிசம்பர்31, 2016 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ |
|---|---|---|---|
| மொத்த நட்டம் | 60,000 | அச்சு மற்றும் எழுது பொருள் | 2,000 |
| விற்பனை மேம்பாட்டிற்கான செலவுகள் | 5,000 | சட்டச் செலவுகள் | 5,000 |
| | | வாராக்கடன் | 1,000 |
| வழங்கல் செலவுகள் | 15,000 | தேய்மானம் | 2,000 |
| அளித்தகழிவு | 7,000 | வாடகை பெற்றது | 4,000 |
| கடன் மீதானவட்டி செலுத்தியது | 5,000 | காப்பீட்டிற்கு உட்படாத, தீயினால் ஏற்பட்டநட்டம் | 3,000 |
| கட்டுமச் செலவுகள் (விற்பனை மீது) | 4,000 | | |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | | |

37. கீழ்க்கண்டசரிக்கட்டுதல்களுக்கு 2018, மார்ச் 31 ம் நாளன்று சரிக்கட்டுப் பதிவுகள் தருக.
(i) எடுப்புகள் மீதான வட்டி ரூ. 50
(ii) வாராக்கடன் ரூ. 500 போக்கெழுதவும்
(iii) அறைகலன் மீதான தேய்மானம் ரூ. 1,000

38. சிபி என்பவரின் 2017, டிசம்பர் 31ஆம் நாள் இருப்பாய்வில் முதல் ரூ. 1,05,000 தரப்பட்டுள்ளது. வங்கி கணக்கில்ரூ. 80,000 உள்ளது.
சரிக்கட்டுதல்: வருமானவரி செலுத்தியது ரூ. 15,000.
சரிக்கட்டுப் பதிவு தந்து இவ்விவரங்கள் 2017, டிசம்பர் 31ஆம் நாளைய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

39. கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பல்வேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்.

40. தேய்மானம் நீக்க வேண்டியதன் நோக்கங்கள் யாவை?

IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். (7X5=35)

41. அ. கணினி வியாபாரம் செய்யும் இரமேஷின் குறிப்பேட்டில் பின்வரும் நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

2018 மார்ச்

1 இரமேஷ், ரொக்கம் ரூ. 3,00,000, சரக்கிருப்பு ரூ. 80,000 மற்றும் அறைகலன் ரூ. 27,000 ஆகியவற்றுடன் தொழில் தொடங்கினார்.

2 வங்கியில் பணம் செலுத்தியது ரூ. 2,00,000.

3 ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திடம் இருந்து ரூ. 28,000 மதிப்புள்ள அறைகலன்கள் கடனுக்கு வாங்கப்பட்டது.

4 அசோகனிடமிருந்து ரூ. 5,000 மதிப்புள்ள சரக்குகள் எடுப்பு அட்டை மூலமாக பணம் செலுத்தி வாங்கப்பட்டது.

5 குணாவிடமிருந்து ரூ. 10,000 மதிப்புள்ள பொருட்கள் இணைய வங்கி மூலம் பணம் செலுத்தி வாங்கப்பட்டது.

6 கண்ணனிடமிருந்து ரூ. 20,000க்கான சரக்குகள் வாங்கப்பட்டு, அதற்கான தொகைகடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டது.

7 சியாம் என்பவரிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது ரூ. 50,000.

Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

8 சியாம் எழுதிய மாற்றுச்சீட்டு ஏற்கப்பட்டது ரூ. 50,000

9 ஜெயலெட்சுமி அறைகலன் விற்பனையகத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை பாதி காசோலை மூலம் செலுத்தப்பட்டது

10 சியாமின் மாற்றுச்சீட்டிற்கான பணம் செலுத்தப்பட்டது

(அல்லது)

ஆ. பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு நிரஞ்சன் அவர்களின் 2017 பிப்ரவரி மாதத்திற்கான துணை ஏடுகளை தயார் செய்யவும்.

| 2017 | | ரூ |
|---|---|---|
| பிப்ரவரி 1 | முகில் நிறுவனத்திடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 12,480 |
| பிப்ரவரி 4 | சச்சின் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,000 |
| பிப்ரவரி 6 | மனிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,100 |
| பிப்ரவரி 7 | சச்சின் நிறுவனம் திருப்பிய சரக்கு அதற்கு பணம் செலுத்தப்படவில்லை | 1,200 |
| பிப்ரவரி 9 | முகில் நிறுவனத்திற்கு சரக்கு திருப்பி அனுப்பியது பணம் பெறப்படவில்லை | 1,500 |
| பிப்ரவரி 10 | மணிஷ் நிறுவனத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,300 |
| பிப்ரவரி 14 | முகில் நிறுவனத்திடம் சரக்கு கடனுக்கு வாங்கியது | 15,200 |

42. அ.பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்கவும்

(i) ரொக்கம் ரூ. 80,000 மற்றும் சரக்குகள் ரூ. 75,000 கொண்டு வியாபாரம் தொடங்கப்பட்டது

(ii) சண்முகத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது ரூ. 50,000.

(iii) சண்முகத்திடமிருந்து ரூ. 49,000 பெற்றுக் கொண்டு அவரது கணக்குத் தீர்க்கப்பட்டது

(iv) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ. 3,000.

(v) ரூ.1,000 மதிப்புள்ள சரக்குகள் தொண்டு நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது

(vi) காப்பீட்டு முனைமம் செலுத்தியது ரூ. 3,000.

(vii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ. 500.

(அல்லது)

ஆ.இராமலிங்கம் என்பவரின் 2017 ஜூலை மாதத்திற்கான பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து தனிப்பத்தி ரொக்க ஏட்டைத் தயாரிக்கவும்.

| 2017 ஜூலை | | ரூ. |
|---|---|---|
| 1 | கை ரொக்கம் | 32,000 |
| 5 | கீர்த்தனாவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 5,000 |
| 6 | கட்டுமச் செலவுக்காக பணம் கொடுத்தது | 300 |
| 7 | ரொக்கக் கொள்முதல் | 12,400 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 2,600 |
| 10 | மேலாளருக்கு சம்பளம் ரொக்கமாகத் தரப்பட்டது | 7,000 |
| 11 | பாலா என்பவருக்கு ரொக்கம் கொடுத்தது | 3,000 |
| 12 | போஸ் என்பவரிடமிருந்து கடனுக்கு கொள்முதல் செய்தது | 2,500 |
| 24 | பணம் வைப்பு இயந்திரத்தின் மூலம் வங்கிக்கு செலுத்திய ரொக்கம் | 4,000 |
| 27 | வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 2,000 |
| 31 | அலுவலக வாடகை ரொக்கமாகச் செலுத்தியது | 6,000 |

43. அ. பின்வரும் நடவடிக்கைகளை கணேசன் என்பவரது ஏடுகளில் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளிலும் எடுத்து எழுதுக

| 2017 | | ரூ |
|---|---|---|
| அக் 1 | தொழில் ரொக்கத்துடன் தொடங்கியது | 25,000 |

Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

| | | |
|---|---|---|
| 5 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 12,500 |
| 10 | அறைகலன் வாங்கி காசோலை கொடுத்தது | 2,000 |
| 15 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 5,000 |
| 19 | வாசு என்பவருக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 4,000 |
| 22 | சொந்தப் பயனுக்காக சரக்குகள் எடுத்துக் கொண்டது | 500 |

(அல்லது)

ஆ. கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து ரஹீம் நிறுவனத்தின் 2018 மார்ச் 31-ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலைத் தயார் செய்க.

(அ) ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று ரூ. 2,500 அதே நாளில் வங்கி அறிக்கையின் படி இருப்பு ரூ. 1,99,000.

(ஆ) வங்கியால் நேரடியாக பெறப்பட்ட கடன் பத்திரம் மீதான வட்டி ரூ. 700

(இ) நிகழ் நேர மொத்த தீர்வகம் (RTGS) வழியாக வங்கியில் பெறப்பட்ட தொகை ரூ. 2,00,000 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை

(ஈ) 2018 மார்ச் 29 அன்று விடுத்த இரு காசோலைகள் ரூ. 1,800 மற்றும் ரூ. 2,000-இல் இரண்டாவது காசோலை மட்டுமே செலுத்துகைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டது.

(உ) நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய சிற்றுந்து மீதான காப்பீட்டு முனைமம் ரூ. 1,000 ரொக்க் ஏட்டில் பதியப்படவில்லை.

44. அ. ரவிச்சந்திரன் என்பவரது ஏடுகளிலிருந்து 31.12.2016 அன்று எடுக்கப்பட்ட இருப்புகளிலிருந்து இருப்பாய்வு தயாரிக்கவும்.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 1,50,000 | விற்பனை | 75,000 |
| கடனாளிகள் | 22,800 | விற்பனைத் திருப்பம் | 1,000 |
| பெற்றவாடகை | 500 | அளித்ததள்ளுபடி | 800 |
| வங்கி மேல்வரைப்பற்று | 3,100 | பெற்றத் தள்ளுபடி | 1,000 |
| கடனிந்தோர் | 5,500 | கூலி | 2,900 |
| வளாகம் | 1,46,000 | சம்பளம் | 3,500 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | கழிவு கொடுத்தது | 1,100 |
| கொள்முதல் | 45,000 | பொதுச் செலவுகள் | 2,000 |

(அல்லது)

ஆ. பின்வரும் நடவடிக்கைகளை ஜான் என்பவரது முப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2017 டிசம்பர்

| | | ரூ. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு முன் தூக்கி எழுதப்பட்டது | 12,600 |
| 1 | வங்கி மேல்வரைப் பற்று முன் தூக்கி எழுதப்பட்டது | 36,000 |
| 1 | சில்லறைக் காசாளருக்கு முன்பணம் காசோலை மூலம் கொடுத்தது | 3,000 |
| 5 | ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 12,000 |
| 7 | பங்குகள் முதலீட்டின் மீது வங்கி வசூலித்த பங்காதாயம் | 1,000 |
| 13 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 10,000 |
| 14 | வங்கி மேல்வரைப் பற்றிற்காக வங்கி வசூலித்த வட்டி | 1,500 |
| 18 | சித்திக் என்பவருக்கு காசோலை கொடுத்தது | 8,000 |
| | அவரிடமிருந்து பெற்ற தள்ளுபடி | 200 |

Scanned with OKEN Scanner

24 காப்பீட்டுக் கோரல் பணம் காசோலையாகப் பெறப்பட்டு அன்றே வங்கியில் செலுத்தப்பட்டது 17,000

28 பாஸ்கரிடம் பெற்ற ரொக்கம் 15,000

அவருக்கு அளித்த தள்ளுபடி 150

31 கையில்ரூ. 18,600 வைத்துக் கொண்டு மீதமுள்ள தொகை வங்கியில் செலுத்தப்பட்டது

45. அ. பின் வரும் பிழைகள் கணக்காளரால் இருப்பாய்வு தயாரிக்கும் முன் கண்டறியப்பட்டன. அவற்றைத் திருத்தம் செய்யவும்.

(அ) ரொக்கக் ஏட்டின் பற்றுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடிப் பத்தியின் கூட்டுத் தொகைரூ. 1,100 இன்னும் பேரேட்டில் எடுத்து எழுதப்படாமல் உள்ளது.

(ஆ) ரொக்க ஏட்டின் வரவுப் பக்கத்தில் உள்ள தள்ளுபடிப் பத்தியின் மொத்தத்தில் ரூ. 500 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

(இ) அன்புச்செல்வனிடமிருந்து ரூ. 700 க்கு கடனுக்கு சரக்கு வாங்கியது அவரின் கணக்கில் பற்று பக்கத்தில் எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(ஈ) பொன்முகிலுக்கு கடனுக்கு ரூ. 78க்கு சரக்கு விற்றது அவருடைய பேரேட்டுக் கணக்கில்ரூ. 87 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(உ) விற்பனைத் திருப்ப ஏட்டின் மொத்தம் ரூ. 550 இருமுறை பேரேட்டில் எடுத்து எழுதப்பட்டுள்ளது.

(அல்லது)

ஆ. சுதா நிறுமம் ஏப்ரல் 1, 2008 அன்று ரூ. 64,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. இயந்திரத்தை நிறுவுவதற்காக ரூ. 28,000 செலவு செய்தது. ஆண்டுக்கு 10% தேய்மானம் நேர்க்கோட்டு முறையில் கணக்கிட வேண்டும். இயந்திரம் பயனற்றுப் போனதால் 30 ஜூன் 2010 அன்று ரூ. 52,000 க்கு விற்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் டிசம்பர் 31ல் முடிக்கப் பெறுகின்றன. இயந்திரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

46. அ. பின்வரும் செலவினங்கள் முதலினம், வருவாயினம், மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளா எனக் கூறுக.

(i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம், மற்றும் நிறுவுகைச் செலவுகள் ரூ.1,000

(ii) அலுவலக வாடகைச் செலுத்தியது ரூ. 2,000

(iii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ரூ. 5,000

(iv) ஐந்து வருடங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மோட்டார் வாகனம் மீதான வாடகை, ஒவ்வொரு வருடமும் செலுத்தப்படுகிறது.

(v) புதிய பொருளை அறிமுகப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் ரூ 10 கோடி

(அல்லது)

ஆ. 2018, மார்ச் 31 ஆம் நாளன்று டெரி என்ற வியாபாரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் இருப்புகளிலிருந்து வியாபார இலாப நட்டக்கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| பற்று இருப்பு | ரூ. | வரவு இருப்பு | ரூ. |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 10,000 | விற்பனை | 1,22,500 |
| ரொக்கம் | 2,500 | கடனீந்தோர் | 5,000 |
| வங்கி | 5,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,000 |
| உள்ஏற்றிச்செல் செலவு | 750 | முதல் | 1,00,000 |
| கொள்முதல் | 95,000 | | |
| எடுப்புகள் | 4,500 | | |
| கூலி | 27,500 | | |
| இயந்திரம் | 50,000 | | |
| கடனாளிகள் | 13,500 | | |

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

| | | | |
|---|---|---|---|
| அலுவலக அஞ்சல் செலவுகள் | 150 | | |
| பல்வகைச் செலவுகள் | 850 | | |
| வாடகைகொடுத்தது | 2,500 | | |
| அறைகலன் | 17,250 | | |
| | 2,29,500 | | 2,29,500 |

இறுதிச் சரக்கிருப்பு (31.3.2018) ரூ. 8,000

47. அ. சங்கீதாவின் ஏடுகளில் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 20,000 | சம்பளம் | 6,600 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 8,000 | நிறுவுகைச் செலவுகள் | 4,500 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,500 | விளம்பரம் | 2,300 |
| கொள்முதல் | 75,000 | அறைகலன் | 10,000 |
| விற்பனை | 95,000 | வங்கி ரொக்கம் | 3,200 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 12,000 | இதர வரவுகள் | 600 |
| எடுப்புகள் | 4,500 | | |

சரிக்கட்டுதல்கள்:

(அ) மார்ச் 31, 2018 அன்று இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 14,200

(ஆ) சங்கீதாவின் வருமான வரி செலுத்தியது ரூ. 800

(இ) முதல் மீது வட்டி 10% அனுமதிக்கவும்.

(ஈ) மேலாளருக்குரிய கழிவு, கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% தரப்பட வேண்டும்.

(அல்லது)

ஆ. கீழ்க்கண்ட விவரங்கள் இருபாய்விலிருந்து பெறப்பட்டன

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 50,000 | |
| ஐயக்கடன் ஒதுக்கு | | 5,000 |
| வாராக்கடன் | 3,000 | |

கூடுதல் தகவல்கள்:

(அ) கூடுதல் வாராக்கடன் ரூ. 3,000

(ஆ) பற்பல கடனாளிகள் மீது 10% வாராஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கவும்.

தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரம் எவ்வாறு இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் தோன்றும் எனக் காட்டவும்.

Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

**+1 கணக்குப்பதிவியல் Pre Mdu Dist Feb - 23**

**சரியான விடை 20X1=20**

1. (ஈ) மேற்கண்ட ஏதுமில்லை
2. (இ) இருப்புநிலைக்குறிப்பு
3. (இ) வணிகத் தனித்தன்மை கருத்து
4. (ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
5. (அ) இரட்டைத் தன்மை
6. (ஈ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கின் இருப்பை அறிய
7. (ஈ) அனைத்து கணக்குகளும்
8. (அ) கொள்முதல் கணக்கின் பற்றுப் பக்கம்
9. (ஈ) உரிய குறிப்பேடு
10. (ஈ) பேரேட்டில் ரொக்க கணக்கு
11. (இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
12. (ஈ) சரிக்கட்டும் பட்டியல் கணக்காண்டின் இறுதியில் மட்டுமே தயாரிக்கப்படும்
13. (அ) விதிப்பிழை
14. (அ) கொள்முதல் ஏட்டில் ரூ1000 குறைவாக கூட்டப்பட்டுள்ளது
15. (ஆ) குறைந்த செல் இருப்பு முறை
16. (ஈ) முதலின செலவுகள்
17. (ஈ) அடக்கவிலை அல்லது நிகரத்தீர்வு இதில் எது குறைவோ
18. (ஆ) நிதி நிலையினை
19. (ஆ) பெரிய நடுத்தர வணிகம்
20. (ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. கணக்கியல் தகவல்களைப்பதிவு செய்யும் எவையேனும் இரண்டு அடிப்படைகள்:** ரொக்கஅடிப்படை, நிகழ்வுஅடிப்படை அல்லது வணிகஅடிப்படை, கலப்பு அல்லது கலப்பினஅடிப்படை.

**22. கணக்கியல் முழு வெளியீட்டுகொள்கை:** அனைத்து முக்கியத்தகவல்களும் நிதிநிலை அறிக்கை மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. பெரும்பாலான நிறுவனங்களில் நிர்வாகமும் உரிமையாளர்களும் வேறுபடுத்தப்பட்டு இருப்பதால் இந்த மரபு முக்கியத்துவம் பெறுகிறது.

**23.** விடுபட்ட பகுதிகளை நிரப்புக

| | சொத்துக்கள் = | பொறுப்புகள் + | முதல் |
|---|---|---|---|
| அ | 30000 | 20000 | **10000** |
| ஆ | 25000 | **10000** | 15000 |
| இ | **55000** | 25000 | 30000 |
| ஈ | 40000 | **10000** | 30000 |

**24. இடாப்பு** என்பது ஒரு வணிக ஆவணம் அல்லது இரசீது அல்லது அறிக்கை ஆகும். இதனை விற்பனையாளர் தயார் செய்து சரக்கினை வாங்குபவருக்கு அளிக்கிறார். இதில் விற்பனைச் செய்யப்படும் சரக்கின்அளவு, தரம், விலை மொத்த மதிப்பு போன்ற விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.

**25.** வங்கி சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | தொ | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு<br>கூட்:- வாடிக்கை நேரடி வங்கி செலு | | 7130<br>800 |
| | | **7930** |
| கழி:- செலுத்திய காசோலை வசூலாகாது | | 1000 |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **6930** |

**26. தேய்மானத் தொகை** = $\frac{\text{சொ.ஆ.அ.வி} - \text{எ.இ.ம}}{\text{சொ.எ.நோ.பயன காலம்}}$

$= \frac{100000 - 10000}{5} = \frac{90000}{5} = \mathbf{18000}$

**தேய்மான விகிதம்** = $\frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்க விலை}} \times 1000$

$= \frac{18000}{1000000} \times 100 = \mathbf{18\%}$

**27. விற்பனை அடக்கவிலை**

= தொசரக் + கொள் + நேரடிசெ - இறுதிசரக்கிருப்பு

= 10000 + 80000 + 7000 - 15000= ரூ **82000**

**28. கணக்குகள் குழுப்படுத்துதல்** எந்த ஒரு நிறுவனத்திலும் முதன்மை அலகு, பல முக்கிய தலைப்புகளாக வகைப்படுத்தப்பட்டு அவை மேலும் பல துணைத் தலைப்புகளாக பிரிக்கப்படுகின்றன. கணக்குகளை முதன்மை மற்றும் துணைதலைப்பென்று பல்வேறு குழுக்களாக வகைப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு கணக்கிற்கும், குறிமுறை ஒதுக்கியபின் இவைகள் கணினிஅமைப்பில் நிரலாக்கம் செய்யப்படுகின்றன.

**29. இருப்பாய்வு** என்பது, ஒரு குறிப்பிட்ட நாளில் அனைத்து பேரேட்டுக் கணக்குகளிலும் உள்ள பற்று இருப்புகளையும் மற்றும் வரவு இருப்புகளையும் உள்ளடக்கிய ஓர் அறிக்கைஆகும்.

**30. பிழைத் திருத்தம்**

அ) விற்பனைக் கணக்கில் ரூ.100 **வரவு** வைக்க வேண்டும்

ஆ) விற்பனைக் கணக்கில் ரூ.200 **பற்று** வைக்க வேண்டும்.

இ) கொள்முதல் கணக்கில் ரூ.300 **பற்று** வைக்க வேண்டும்.

ஈ) கொள்முதல் கணக்கில் ரூ.400 **வரவு** வைக்க வேண்டும்.

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. நவீனவணிகஉலகில் கணக்காளரின் பங்களிப்பு**

**1.ஏடுகளைப் பராமரிப்பவர்:-** நிதிசார்ந்த நடவடிக்கைகளை முறையாக பதிவுசெய்து ஏடுகளைப் பராமரிக்கிறார்.

**2.நிர்வாகத்திற்குத் தகவல்களைத் தருபவர்:-** முடிவுகளை எடுக்கவும் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கவும், நிர்வாகத்திற்குத் தேவையான நிதிசார்ந்த தகவல்களை அளித்து உதவுகிறார்.

**3.வணிகச் சொத்துக்களின் காப்பாளர்:-** சொத்துக்களுக்கான பதிவேடுகளைப் பராமரிப்பதன் மூலம் நிர்வாகம் அந்தச் சொத்துக்களைப்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பாதுகாத்து கட்டுப்படுத்த முடிகிறது. சொத்துக்களுக்கான காப்பீடு மற்றும் சொத்துகள் பராமரிப்பைப் பற்றிய ஆலோசனையை நிர்வாகத்திற்கு வழங்குகிறார்.

32. **கணக்கியல் தரநிலைகள்:** கணக்கியலில் பின்பற்றப்பட வேண்டிய கட்டமைப்பையும், விதிகளையும் கணக்கியல் தரநிலைகள் தருவதால், வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது.
நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில், நிலைத் தன்மை, ஒப்பீட்டு தன்மை, நிறைவுத் தன்மை, மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தரநிர்ணயம் செய்வது அவசியமாகிறது.
கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு அளவிட்டு, பதிவுசெய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக, கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

**33. குறிப்பேட்டுபதிவில் விடுபட்ட தகவல்**

| நா | விவரம் | ப ரூ | வ ரூ |
|---|---|---|---|
| | **ரொக்க** க/கு ப.<br>**அளித்ததள்ளுபடி** க/கு ப.<br>நிஹா க/கு | **18800**<br>**200** | <br><br>**19000** |

| 34. குறிப்பேடு | பேரேடு |
|---|---|
| நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும். | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை இதில் எடுத்தெழுதப்படும். |
| பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின்படி பதிவு செய்யப்படுகிறது. | கணக்குகளை வரிசைப்படி பதிவுகள் செய்யப்படுகின்றன. |

35. அ) தேய்மானக் கணக்கில் 5000 **பற்று** வைக்க வேண்டும்.
ஆ) கூலிக் கணக்கில் 2000 **வரவு** வைக்க வேண்டும்.
இ) நிலா கணக்கில் 50 **பற்று** வைக்க வேண்டும்.

**36. இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| மொ நட்டம் | | 60000 | பங்காபெ | 3000 |
| விற்மேசெ | | 5000 | வாட பெற் | 4000 |
| வழங்செ | | 15000 | | |
| அளிகழிவு | | 7000 | | |
| கடவட்செ | | 5000 | | |
| கட்டுமசெ | | 4000 | | |
| அச்சஎழு | | 2000 | | |
| சட்டசெ | | 5000 | | |
| வாராகடன் | | 1000 | | |
| தேய்மானம் | | 2000 | | |
| தீ நட்டம் | | 3000 | **நிகர நட்** | **102000** |
| | | 109000 | | 109000 |

**37. சரிக்கட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்றுரூ | வரவுரூ |
|---|---|---|---|
| 2018 மா31 | முதல் க/கு ப.<br>எ மீ வட்டிக/கு | 50 | <br>50 |
| 31 | வாராகடன் க/கு ப.<br>பற்பலகடன க/கு | 500 | <br>500 |
| 31 | தேய்மான க/கு ப.<br>அறைகலன் க/கு | 1000 | <br>1000 |

**38. சரிக்கட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்றுரூ | வரவுரூ |
|---|---|---|---|
| 2017 டிச31 | எடுப்பு க/கு ப.<br>வங்கி க/கு | 15000 | <br>15000 |

**இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொ |
|---|---|---|---|---|
| முதல் | 105000 | | வங்கி 80000 | |
| (-) எடுப்பு | 15000 | **90000** | (-) எடுப்பு15000 | **65000** |

**39.கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பல்வேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்.**
நாளேடுகள் /குறிப்பேடுகள்
பேரேடு
இருப்பாய்வுகள்
வியாபாரக் கணக்கு
இலாபநட்டக்கணக்கு
இருப்பு நிலைக்குறிப்பு மற்றும் பல

**40. தேய்மானம் நீக்கவேண்டியதன் நோக்கங்கள்**
**1.சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய:-** பொருந்துகை, கோட்பாட்டின் படி ஒரு கணக்காண்டில் செய்த செலவுகளை அந்தக் காலத்தில் ஈட்டிய வருமானத்துடன் பொருத்திப் பார்க்கப்படவேண்டும்.
**2.வரிச் சலுகைகளைப் பெற:-** இந்திய வருமான வரிச் சட்டத்தின் படி வணிக வருமானத்திற்கு வரி கணக்கிடும் போது தேய்மானம் வருமானத்திலிருந்து கழித்து காண்பிக்கப்பட வேண்டும். ஆகையால் வரிச்சுமையை குறைப்பதற்காக தேய்மானம் கணக்கிடப்பட்டு இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
**3.சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய:-** இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 123(ன்)படி ஒவ்வொரு நிறுமமும், தனது பங்குதாரர்களுக்கு பங்காதாயம் அறிவிக்கும் முன் நிலைச் சொத்தின் மீது தேய்மானம் நீக்குதல் அவசியம்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X3=21**

**41.அ.** **இரமேஷின் குறிப்பேட்டுப்பதிவுகள்**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 ஜன 1 | ரொக்க க/கு ப<br>சரக்கிருப்பு க/கு<br>அறைகலன் க/கு<br>இரமேஷின் முதல் க/கு | 300000<br>80000<br>27000 | 407000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு | 200000 | 200000 |
| 3 | அறைகலன் க/கு ப<br>ஜெயலட்சுமி க/கு | 28000 | 28000 |
| 4 | கொள்முதல் க/கு ப<br>வங்கி க/கு | 5000 | 5000 |
| 5 | கொள்முதல் க/கு ப<br>வங்கி க/கு | 10000 | 10000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>வங்கி க/கு | 20000 | 20000 |
| 7 | கொள்முதல்க/கு ப<br>சியாம் க/கு | 50000 | 50000 |
| 8 | சியாம் க/கு ப<br>செமாசீ க/கு | 50000 | 50000 |
| 9 | ஜெயலட்சுமி க/கு ப<br>வங்கி க/கு | 14000 | 14000 |
| 10 | செமாசீ க/கு ப<br>ரொக்க க/கு | 50000 | 50000 |

**41.ஆ.** **கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| 2017 பிப்1 | முகில் | | 12480 |
| | முகில் | | 15200 |
| | **கொள்முதல்** | | **27680** |

**விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்4 | சச்சின் | | 15000 |
| 6 | மணிஷ் | | 12100 |
| 10 | மணிஷ்' | | 13300 |
| | **விற்பனை** | | **40400** |

**கொள்முதல் திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்9 | முகில் | | 1500 |
| | **கொள்முதல் திருப்ப ஏடு** | | **1500** |

விற்பனை திருப்ப ஏடு

| நாள் | விவரம் | தொகை | தொகை |
|---|---|---|---|
| பிப்7 | சச்சின் நிறுவனம் | | 1200 |
| | **விற்பனை திருப்ப ஏடு** | | **1200** |

**42.அ.** **கணக்கியல் சமன்பாடு**

| நடவடிக்கை | சொத்துக்கள் | | | | முதல் | பொறு |
|---|---|---|---|---|---|---|
| | ரொக் | சரக் | கட | முசெ | | |
| தொ.தொ | 80000 | 75000 | | | 155000 | |
| கடன்விற் | 0 | -50000 | 50000 | | | |
| **சமன்பாடு** | **80000** | **25000** | **50000** | | **155000** | |
| சண்முபெற் | 49000 | 0 | -50000 | | -1000 | |
| **சமன்பாடு** | **129000** | **25000** | **0** | | **154000** | |
| கொடுசம் | 0 | 0 | 0 | | -3000 | 3000 |
| **சமன்பாடு** | **129000** | **25000** | **0** | | **151000** | **3000** |
| தொண்டுநிறு | 0 | -1000 | 0 | | -1000 | 0 |
| **சமன்பாடு** | **129000** | **24000** | **0** | | **150000** | **3000** |
| காப்பீடு | -3000 | 0 | 0 | | -3000 | 0 |
| **சமன்பாடு** | **126000** | **24000** | **0** | | **147000** | **3000** |
| முகூசெகா | 0 | 0 | 0 | 500 | 500 | 0 |
| **சமன்பாடு** | **126000** | **24000** | **0** | **500** | **147500** | **3000** |

**42.ஆ.** ராமலிங்கம் என்பவரது தனிப்பத்தி ரொக்கஏடு

| நாள் | பெறுதல்கள் | தொகை | நாள் | செலுத்தல்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1ஜீ1 | இருப்புகீகொ | 32000 | ஜீ6 | கட்டுமானசெல | 300 |
| 5 | கீர்த்தனா | 5000 | 7 | கொள்முதல் | 12400 |
| 8 | விற்பனை | 2600 | 10 | சம்பளம் | 7000 |
| 27 | வங்கி | 2000 | 11 | பாலா | 3000 |
| | | | 24 | வங்கி | 4000 |
| | | | 31 | அ.வாடகை | 6000 |
| | | | **31** | **இருப்பு கீஇ** | **8900** |
| | | **41600** | | | **41600** |
| **ஆ1** | **இருப்புகீகொ** | **8900** | | | |

**43.அ. குறிப்பேட்டுப்பதிவுகள்**

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| ரொக்க க/கு ப.<br>கணேசனின் முதல் க/கு | 25000 | 25000 |
| வங்கி க/கு ப.<br>ரொக்க க/கு | 12500 | 12500 |
| அறைகலன் க/கு ப.<br>வங்கி க/கு | 2000 | 2000 |
| கொள்முதல் க/கு ப.<br>ரொக்க க/கு | 5000 | 5000 |
| வாசு க/கு ப.<br>விற்பனை க/கு | 4000 | 4000 |
| எடுப்பு க/கு ப.<br>கொள்முதல் க/கு | 500 | 500 |

**ப. ரொக்க க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நா | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | முதல் | | 25000 | | வங்கி | | 12500 |
| | | | | | கொள்முதல் | | 5000 |
| | | | | | **இருகீ/இ** | | **7500** |
| | | | **25000** | | | | **25000** |
| | **இருகீ/கெ** | | **7500** | | | | |

**ப. கணேசனின் முதல் க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | **இருகீ/இ** | | **25000** | | ரொ க/கு | | 25000 |

**ப. வங்கி க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நா | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரொ க/கு | | 12500 | | அறைக/கு | | 2000 |
| | | | | | **இருகீ/இ** | | **10500** |

**ப. அறைகலன் க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கிக/கு | | 2000 | | **இருகீ/இ** | | **2000** |

**ப. கொள்முதல் க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரொ க/கு | | 5000 | | எடு க/கு | | 500 |
| | | | | | **இருகீ/இ** | | **4500** |

**ப. வாசு க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | விற் க/கு | | 4000 | | **இருகீ/இ** | | **4000** |

**ப. எடுப்பு க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு.எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | கொ க/கு | | 500 | | **இருகீ/இ** | | **500** |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**43.ஆ.** ரஹீம் நிறுவன வங்கி சரிக்கட்டும் பட்டியல்

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி மேல்வரைப்பற்று | | 2500 |
| கூட:- காசோலை புத்தகக் கட்டணம் காப்பீட்டு கட்டணம் ரொக்க ஏட்டில்பதியவி | | 1000 |
| | | **3500** |
| கழி:- நிகழ் நேர மொத்த தீர்வகம் பதிய | 200000 | |
| ரொக்க ஏட்டின் பற்றுபக்கம் குறைவாக பத | 700 | |
| விடுத்த இரு காசோலைகளில் முன்னிலை | 1800 | **202500** |
| **வங்கி அறிக்கையின் படி சாதகமான இருப்பு** | | **199000** |

**44.அ.** ரவிச்சந்திரன் என்பவரின் இருப்பாய்வு

| வ௭ | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 1 | முதல் | | 150000 |
| 2 | கடனாளிகள் | 22800 | |
| 3 | பெற்ற வாடகை | | 500 |
| 4 | வங்கி மேல்வரைப்பற்று | | 3100 |
| 5 | கடனீந்தோர் | | 5500 |
| 6 | வளாகம் | 146000 | |
| 7 | தொடக்க சரக்கிருப்பு | 10000 | |
| 8 | கொள்முதல் | 45000 | |
| 9 | விற்பனை | | 75000 |
| 10 | விற்பனைத் திருப்பம் | 1000 | |
| 11 | அளித்த தள்ளுபடி | 800 | |
| 12 | பெற்ற தள்ளுபடி | | 1000 |
| 13 | கூலி | 2900 | |
| 14 | சம்பளம் | 3500 | |
| 15 | கழிவு கொடுத்தது | 1100 | |
| 16 | பொதுச் செலவுகள் | 2000 | |
| | **மொத்தம்** | **235100** | **235100** |

**44.ஆ.** ஜான் என்பவரின் முப்பத்தி ரொக்கஏடு

| நா | பெறு | த | ரொ | வங் | நா | செலு | த | ரொ | வங் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| டி1 | இருகீ௭ | | 12600 | | 1 | இகீ௭ | | | 36000 |
| 5 | விற்ப | | 12000 | | 1 | சி.ரெ | | | 3000 |
| 7 | பங்கா | | | 1000 | 13 | வங் | | 10000 | |
| 13 | ரொக் | | | 10000 | 14 | வ.க | | | 1500 |
| 24 | காப் | | | 17000 | 18 | சித்த | | | 8000 |
| 28 | பாஸ் | | 15000 | | 31 | வங் | | 11000 | |
| 31 | ரொக் | | | 11000 | | | | | |
| **31** | **கீஇ** | | | **9500** | **31** | **கீஇ** | | **18600** | |
| | | | **39600** | **48500** | | | | **39600** | **48500** |
| | **இகீகெ** | | **18600** | | | | | | **9500** |

**45.அ.**

அ.அளித்த தள்ளுபடி கணக்கில் **ரூ 1100 பற்று** வைக்க வேண்டும்

ஆ. பெற்ற தள்ளுபடி கணக்கில் **ரூ 500 வரவு** வைக்க வேண்டும்

இ. அன்புச்செல்வன் கணக்கில் **ரூ 1400 வரவு** வைக்க வேண்டும்

ஈ. பொன்முகில் கணக்கில் **ரூ 9 வரவு** வைக்க வேண்டும்

உ. விற்பனைத் திருப்ப கணக்கில் **ரூ 550 வரவு** வைக்க வேண்டும்

**45.ஆ.** **இலாப நட்டத்தைக் கணக்கிடல்**

| விவரம் | தொகை |
|---|---|
| இயந்திரத்தின் அடக்க விலை | 64000 |
| கூட:- நிறுவுதல் செலவு | 28000 |
| | **92000** |
| கழி:- முதல் ஆண்டு தேய்மானம் | 6900 |
| . | **85100** |
| கழி:- இரண்டாம் ஆண்டு தேய்மானம் | 9200 |
| | **75900** |
| கழி:- மூன்றாம் ஆண்டு தேய்மானம் | 4600 |
| விற்ற நாளில் ஏட்டு மதிப்பு | **71300** |
| கழி:- விற்ற விலை | 52000 |
| விற்பனை மீதான இலாபம் | **19300** |

**இயந்திரக் கணக்கு**

| நாள் | விவரம் | தொ | நாள் | விவரம் | தொ |
|---|---|---|---|---|---|
| 09ஏ1 | வங்கி க/கு | 92000 | டி31 | தேய்மா க/கு | 6900 |
| | | | | | **85100** |
| | | **92000** | | **இருப்பு கீ/இ** | **92000** |
| 09ஜ1 | இருப்புகீ/கொ | 85100 | டி31 | தேய்மா | 9200 |
| | | | 31 | க/கு | **75900** |
| | | **85100** | | **இருப்பு கீ/இ** | **85100** |
| 10ஜ1 | இருப்புகீ/கொ | 75900 | டி31 | தேய்மா | 4600 |
| | | 20000 | **31** | க/கு | 52000 |
| | | | | வங்கி க/கு | **19300** |
| | | **75900** | | **லாபநட்டம்** | **75900** |

**46.அ.** 1 புதிய இயந்திரம் நிறுவச் செலவு – **முதலின செலவு**

2. அலுவலக வாடகை செலுத்தியது – **வருவாயின செலவு**

3. இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது – **வருவாயின செலவு**

4. ஐந்து வருடத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மோட்டார் வாகனம் மீதான வாடகை ஒவ்வொரு வருடமும் செலுத்தப்பட்டது **– நீள்பயன் வருவாயின செலவு**

5. புதிய பொருளை அறிமுகப்படுத்த செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் - **நீள்பயன் வருவாயின செலவு**

**46.ஆ.** **டெரி என்பவரின் வியாபார இலாப நட்ட கணக்கு**

| விவரம் | தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|
| தொ.சரக்கிருப்பு | 10000 | விற்பனை | 122500 |
| உள்ஏற்றி | 750 | | |
| கொள்முதல் | 95000 | இறுதி சரக்கிரு | 8000 |
| கூலி | 27500 | **மொத்த நட்டம்** | **2750** |
| | | | |
| | **133250** | | **133250** |
| **மொத்த நட்டம்** | **2750** | | |
| அலுஅஞ்செ | 150 | | |
| பல்வகைசெ | 850 | | |
| வாடகை | 2500 | **நிகர நட்டம்** | **6250** |
| 3500 | **6250** | | **6250** |

**இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை |
|---|---|---|---|---|
| முதல் | 100000 | | ரொக்கம் | 2500 |
| (-) **நிகரநட்** | 6250 | | வங்கி | 5000 |
| | 93750 | | | |
| (-) எடுப்பு | 4500 | **89250** | இயந்திரம் | 50000 |
| கடனீந்தோர் | | 5000 | கடனாளி | 13500 |
| செமாசீ | | 2000 | அறைகலன் | 17250 |
| | | | இ. சரக்கிருப்பு | 8000 |
| | | **96250** | | **96250** |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

**47.அ. சங்கீதாவின் 31.03.18க்கான வியாபர க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ.சர | | 12000 | விற்பனை | 95000 |
| கொள்முதல் | | 75000 | இறுதிசரக் | 14200 |
| மொ.இலாபம் | | **22200** | | |
| | | 109200 | | 109200 |

**சங்கீதாவின் 31.03.18க்கான இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளம் | | 6600 | மொத்த இ | 22200 |
| நிறுவகைசெ | | 4500 | இதரவரவு | 600 |
| விளம்பரம் | | 2300 | | |
| முமீவ10% | | 2000 | | |
| மே கழிவு (7400x10%) | | 740 | | |
| **நிகர லாபம்** | | **6660** | | |
| | | 22800 | | 22800 |

**சங்கீதாவின் 31.03.18க்கான இருப்புநிலைக்குறிப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் | 20000 | | பெமாசீ | 8000 |
| (+) முமீவ | 2000 | | அறைகலன் | 10000 |
| | 22000 | | வங்கி 3200 | |
| (+)நிகரலா | 6660 | | (-) வரி 800 | 2400 |
| | 28660 | | இறுதிசரக் | 14200 |
| (-) வரி | 800 | | | |
| | 27860 | | | |
| (-) எடுப்பு | 4500 | **23360** | | |
| செமாசீ | | 10500 | | |
| மேலாளகழிவு | | 740 | | |
| | | | | |
| | | **34600** | | **34600** |

**47.ஆ. கணக்கீடு**

| **விவரம்** | **தொகை ரு** |
|---|---|
| பற்பல கடனாளி | 50000 |
| (-) கூடுதல் வாராகடன் | 3000 |
| | 47000 |
| (-) வாரா ஐயக்கடன் | 4700 |
| | **42300** |

**ப. இலாப நட்ட கணக்கு வ.**

| | | | | |
|---|---|---|---|---|
| வாராகடன்<br>(+) கூடுதல் | 3000<br>3000 | | | |
| | 6000 | | | |
| (+) இறுதி ஐய ஒதுக் | 4700 | | | |
| | 10700 | | | |
| (-) தொட ஐய ஒதுக் | 5000 | **5700** | | |

**இருப்புநிலைக்குறிப்பு**

| பொறு | | | சொத்து | | |
|---|---|---|---|---|---|
| | | | கடனாளி | 50000 | |
| | | | (-) கூடுதல் வாரா | 3000 | |
| | | | | 47000 | |
| | | | (-)வாரா ஐய | 4700 | **42300** |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com